**செய்தி வெளியீடு எண்:596** **நாள்:15.12.2016**

**செய்தி வெளியீடு**

தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் ஆண்டுதோறும் மாவட்ட அளவில் கல்லூரி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இந்த ஆண்டு (2016–17) சென்னை மாவட்ட அளவில் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 23.12.2016ஆம் நாளன்று சென்னை, காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரியில் காலை 9.00 மணி முதல் நடைபெற உள்ளது.

ஒவ்வொரு போட்டியிலும் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ.10,000/–மும், இரண்டாம் பரிசாக ரூ.7,000/–மும், மூன்றாம் பரிசாக ரூ.5,000/–மும் மற்றும் சான்றிதழும் வழங்கப்படும்.

போட்டிக்கான தலைப்புகள் போட்டி தொடங்கும்போது அறிவிக்கப்பெறும். போட்டி முடிவுகள் அன்றே அறிவிக்கப்பெறும். போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் பயிலும் கல்லூரி முதல்வரிடம் அல்லது துறைத்தலைவரிடம் உரிய படிவத்தில் பரிந்துரையை பெற்று போட்டி நாளன்று துணை இயக்குநரிடம் நேரில் அளிக்க வேண்டும். போட்டி விதிமுறைகள், விண்ணப்பப் படிவம் www.tamilvalarchithurai.org என்ற வலைத்தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**